# நடைமுறைப்பயன்பாட்டில் தமிழ்ப்பழமொழிகளின் உருமாற்றங்கள்

**சி. சிவகுமார்**

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி, இலங்கை

**சுருக்கம்:** ஏட்டுக்கல்வி இல்லாத காலத்தில் இருந்தே தமிழில் பழமொழிகள் தோன்றி, அவை இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம், சூழ்நிலைகளுக்கேற்ப சொல், பொருள் நிலைகளில் உருமாறிப் பயின்று வந்திருக்கின்றன. இவ்வாறு மூலவடிவம் சிதைவு அடைந்தமைக்கு செவிவழியாகக் கடத்தப்பட்டமை, தொகுப்பின் போதான தவறுகள், சூழல் மாறுபாடுகளே காரணம் ஆகும். எனவே பழமொழிகளின் உண்மை வடிவத்தினை ஆராய்ந்து வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். பண்டைய மக்களிடையே விருட்சமாக வளர்ந்திருந்த பழமொழிகள் காலங் காலமாகக் கடத்தப்படும் போது பல்வேறு உருமாற்றங்களைப் பெற்றுத் திரிபடைந்து உள்ளன. அதனைப் பல உப பிரிவுகளின் கீழ் நோக்கமுடியும். சிறப்பாக பொருட் சிதைவுப் பழமொழிகள், சொற்சிதைவுப் பழமொழிகள், நாட்டார் கதைவழிப் பழமொழிகள், கர்ண பரம்பரைக் கதைப் பழமொழிகள், இலக்கவிளக்கப் பழமொழிகள், மருத்துவ மற்றும் சோதிட உருமாற்றப் பழமொழிகள், விடுகதை வழிப் பழமொழிகள், பண்பு அல்லது குணம் காட்டும் பழமொழிகள் என்ற அடிப்படைகளில் பழமொழி உருமாற்றங்கள் பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது. வாய்மொழி ரீதியாகக் கடத்தப்பட்ட பழமொழிகள் சிதைவுக்கு உள்ளாகி இருக்கலாம். அல்லது விளக்கம் அற்றிருக்கலாம். அவற்றின் உண்மை வடிவத்தினைக் கண்டு உணர்வதே இவ்வாய்வின் குறிக்கோளாகும். தமிழ்ப் பழமொழிகளின் உண்மை வடிவங்களை ஆராய்ந்து அறிந்து எதிர்காலச் சந்ததியினரிடம் ஆவணப்படுத்தி வழங்குதல் கற்றறிந்தோரின் தலையாய பணியாகும். இந்த ஆய்வு, (i) தமிழ்ப் பழமொழிகள் சொல், பொருள் நிலைகளில் உருமாறியிருத்தல். (ii) காலம், இடம், சூழ்நிலைகளுக்கேற்ப பழமொழிகள் பல்வேறு விளக்கங்களுக்கு உட்பட்டிருத்தல். (iii) பழமொழிகளுக்கு ஏற்ற புதுமொழிகள் தோன்றியிருத்தல் என்பவற்றை இனங்கண்டுள்ளது. அறிவியல் உலகின் மாற்றங்களினால் தமிழ்ப் பழமொழிகளும், பண்பாடும் சிதைவு அடைந்துள்ளன.